இணைப்பு V

(148 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 17—கைத்தறி மற்றும் துணிநூல் துறை

அறிவிப்புகள், 2010–2011

1. தமிழ்நாட்டில் புதிய ஜவுளிக் கொள்கையை அறிமுகப்படுத்துதல்

விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக அளவில் வேலைவாய்ப்பை வழங்குவதோடு இந்தியப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஜவுளித் துறையின் வளர்ச்சியை மேம்படுத்தவும், இத்தொழிலில் அதிக அளவு முதலீட்டையும், வேலைவாய்ப்பையும் பெருக்கவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளபடி, தமிழ்நாட்டில் ஒரு புதிய ஜவுளிக் கொள்கை நடப்பாண்டில் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

2. ஏழை மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் வேட்டி மற்றும் சேலையின் தரத்தினை மேம்படுத்துதல்

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் பல ஆண்டு காலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் வேட்டி மற்றும் சேலையின் தரத்தை உயர்த்தும்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க, 2011 பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்படவுள்ள வேட்டி மற்றும் சேலையின் தரத்தை மேம்படுத்துவதுடன், சேலையின் நீளமும் 5 மீட்டரிலிருந்து 5.50 மீட்டராக அதிகரிக்கப்படும். இதனால் அரசுக்கு சுமார் ரூ.21.00 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.

3. இலவச வேட்டி சேலை உற்பத்தியில் ஈடுபட்டு வரும் 2,500 நெசவாளர்களுக்கு புதிய பெடல் தறிகள் வழங்குதல்

அரசின் இலவச வேட்டி சேலைத் திட்டத்தின்கீழ் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுவரும் கைத்தறி நெசவாளர்களின் பணிச்சுமையைக் குறைத்து, உற்பத்தியை அதிகரித்து, அவர்கள் அதிக வருவாயை ஈட்டும் வகையில், சாதாரண கைத்தறிகளுக்குப்

[2010 ஏப்ரல் 27

பதிலாக, அவர்களுக்கு நடப்பாண்டில் முதற்கட்டமாக 2,500 பெடல் தறிகள் சுமார் ரூ.9.00 கோடி செலவில் வழங்கப்படும்.

4. கைத்தறி நெசவாளர்களுக்கு அடிப்படைக் கூலியில் 10 சதவீதம் உயர்த்தி வழங்குதல்

கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு அடிப்படைக் கூலியில் அகவிலைப்படியும் சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது. 2007-ல் 10 விழுக்காடு அகவிலைப்படி உயர்வும், 2008-ல் 10 விழுக்காடு அடிப்படைக் கூலி உயர்வும், 2009-ல் 15 விழுக்காடு அகவிலைப்படி உயர்வும் வழங்கப்பட்டன. நெசவாளர்களை ஊக்குவிக்கவும், அவர்களது வருவாயை அதிகரித்து வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், நடப்பாண்டில், அடிப்படைக் கூலியில் 10 விழுக்காடு உயர்வு வழங்கப்படும். இதனால் ஏற்படும் கூடுதல் செலவு ரூ.35.00 கோடி ஆகும், கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள சுமார் 2.32 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள், இந்த அடிப்படைக் கூலி உயர்வால் பயன்பெறுவர்.

5. கூட்டுறவுச் சங்கங்களின் பட்டு இரக துணிகளின் விற்பனைக்கு 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்குதல்

கைத்தறி பட்டு நெசவுத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் பட்டுத் துணிகளின் விற்பனை மீது, பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் முதல் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை நிகழும் ஜனவரி மாதம் முடிய 139 நாட்களுக்கு, உருப்படி ஒன்றிற்கு ரூ.1000 உச்சவரம்பிற்குட்பட்டு 10 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படும்.

6. கூட்டுறவு அமைப்பிலுள்ள கைத்தறி நெசவாளர்களை கைத்தறி நெசவு மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்து, அவர்கள் பயன்பெற நடவடிக்கை மேற்கொள்ளுதல்

அமைப்புசாரா கைத்தறி நெசவாளர்கள் பயனடையும் வகையில் கைத்தறி நெசவு மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த

2010 ஏப்ரல் 27]

வாரியத்தில் இதுவரை கூட்டுறவு அமைப்பிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் பதிவு செய்யப்படவில்லை. வாரியம், நெசவாளர்களிடையே பெற்றுள்ள பேராதரவை மனதில் கொண்டு, இந்த நிதியாண்டு முதல், கூட்டுறவு அமைப்பிலுள்ள கைத்தறி நெசவாளர்களும், கைத்தறி நெசவு மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்படுவர். இதனால் 2.32 இலட்சம் நெசவாளர்களுக்கு மருத்துவ உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை மற்றும் விபத்து / மரண உதவித் தொகை போன்ற பல நலத் திட்ட உதவிகள் கிடைக்கும்.

7. கோ-ஆப்டெக்ஸ் பணியாளர்களுக்கு திருத்திய சம்பளம் மற்றும் ஊதிய உயர்வு வழங்குதல்

கோ-ஆப்டெக்ஸ் பணியாளர்களுக்கு 2004 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு வழங்கப்படாமல் உள்ளது. இதனை சீர்செய்யும் வண்ணம் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதிய விகிதங்கள் உயர்த்தி வழங்கப்படும்.

8. ஒரு இலட்சம் விசைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம்

விசைத்தறி நெசவாளர்களுக்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்தால் செயல்படுத்தப்படும் திட்டத்தின்கீழ், ஒரு இலட்சம் விசைத்தறி நெசவாளர்களை பதிவு செய்து அவர்கள் பங்காக செலுத்தப்படவேண்டிய காப்பீட்டுக் கட்டணத்தை தமிழக அரசே செலுத்தும். இக்காப்பீட்டு வசதியினால், ஏழை, எளிய விசைத்தறி நெசவாளர்கள் பயனடைவர்.

9. கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் அலுவலகப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குதல்

கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் அலுவலகப் பணியாளர்களுக்கு, கடந்த பல ஆண்டுகளாக ஊதிய உயர்வு வழங்கப்படாத நிலைமை உள்ளது. அவர்கள் பயனடையும் வகையில் இவ்வாண்டு அவர்களது ஊதிய விகிதங்கள் உயர்த்தப்படும்.

[2010 ஏப்ரல் 27

10. நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான ஊதிய முரண்பாடுகளை சீர்படுத்துதல்

இலாபத்தில் இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிக்கும் வகையிலும் இச்சங்கப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஊதிய விகிதங்களில் உள்ள முரண்பாடுகளை களையும் வகையிலும் அவர்களுக்கான ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டு ஊதியம் உயர்த்தி வழங்கப்படும்.

11. கைத்தறி நெசவாளர்களுக்கு மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம் வழங்குதல்

நெசவுக்கு முந்தைய பணியான, தார் சுற்றும் பணியின் சிரமத்தைக் குறைத்து, துரிதமாக தார் சுற்றும் பணியைச் செய்து முடிக்க, 1,000 கைத்தறி நெசவாளர்களுக்கு, ரூ.15.00 இலட்சம் செலவில் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்கள் வழங்கப்படும்.

12. பட்டுக் கைத்தறிகளை நவீனப்படுத்துதல்

கைத்தறி பட்டு நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வரும் காஞ்சிபுரம், ஆரணி, திருபுவனம், பரமக்குடி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய பகுதிகளில் உள்ள நெசவாளர்களின் வேலைப்பளுவை குறைக்கும் வகையில், அவர்களது தறிகளுக்கு நியுமேட்டிக் மெஷின் பொருத்த நிதி உதவி வழங்கப்படும். இதனால் சுமார் 12,000 கைத்திற நெசவாளர்கள் பயன்பெறுவர்.

13. செயல்பாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளையும் புனரமைத்தல்

கூட்டுறவு அமைப்பில் இயங்கி வரும் நூற்பாலைகளை புனரமைக்க நடப்பாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும். SITRA-வின் (South Indian Textile Research Association) ஆலோசனை பெற்று இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

14. விருதுநகரில் நிறுவப்படும் மாபெரும் கைத்தறிக் குழுமம்

கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், கைத்தறித் தொழிலுக்கான உட்கட்டமைப்பை மேம்படுத்தவும், விருதுநகர் பகுதியைச் சார்ந்துள்ள சுமார் 25,000 கைத்தறி நெசவாளர்கள் பயனடையும் வகையில் மத்திய அரசின் நிதி

2010 ஏப்ரல் 27]

உதவியுடன், ஒரு பெரிய அளவிலான கைத்தறிக் குழுமம் (Mega Handloom Cluster) ரூ.70.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இந்தக் குழுமத்தை நிருவகிக்கும் தொழில்நுட்ப முகவராக, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக கைத்தறித் தொழில்நுட்ப மேம்பாடு, வடிவமைப்பு மற்றும் மாற்று இரக உற்பத்தி, நூல் வங்கி ஏற்படுத்துதல், நடைமுறை மூலதனத்தை மேம்படுத்துதல், விற்பனை பெருக்கத்திற்கு வழிவகை செய்தல், ஏற்றுமதி உற்பத்தி மற்றும் விற்பனையை பெருக்குதல், நெசவுத் திறனை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்காக, நெசவாளர்கள் மானியத்துடன் கூடிய நிதியுதவி பெற வழிவகை செய்யப்படும்.

15. ஜவுளித் தொழிலில் மாசுக் கட்டுப்பாட்டு முயற்சிகளுக்கு நிதி உதவி

திருப்பூரில் பல ஆண்டு காலமாக சிறப்பாகச் செயல்பட்டு வந்துள்ள பின்னலாடைத் தொழிலானது, இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதோடு, நாட்டிலேயே பின்னலாடை ஏற்றுமதியில் முதன்மை நிலை பெற்று விளங்குகிறது. இத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுநீர், சுற்றுச்சூழல் விதிகளுக்கிணங்க கட்டுப்படுத்தப்படவேண்டும் என்ற நீதிமன்ற ஆணைக்கிணங்க, திருப்பூரில், 20 பொது சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருப்பூரில் உள்ள பின்னலாடைத் தொழிலை ஊக்குவிக்கவும், உலக அளவில் அத்தொழிலின் வர்த்தக முக்கியத்துவத்தை தொடர்ந்து நிலைநாட்டவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு இந்த அரசு வழங்கும் முக்கியத்துவத்தின் அடிப்படையிலும், இந்நிதியாண்டில் மானிய உதவியாக ரூ.320.00 கோடி வழங்கப்படும். இதில் ரூ.200.00 கோடி மத்திய அரசின் பங்காகவும், ரூ.120.00 கோடி மாநில அரசின் பங்காகவும் அமையும். ஜவுளித் தொழிலில் ஈடுபட்டுள்ள சாயத் தொழிற்சாலைகளின் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் சாயக்கழிவு நீரினை கடலுக்கு கொண்டு சென்று வெளியேற்றும் திட்டத்திற்கு, 13-வது நிதிக் குழுவின் அறிக்கையில் ரூ.200.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில அரசு எடுத்த தனிச் சிறப்பு முயற்சிகளால் இந்த நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும்.

[2010 ஏப்ரல் 27

16. கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதைப் போற்றும் வகையில் பவள விழா கொண்டாடுதல்

மாநில அளவில் 75 ஆண்டுகளாக தொடர்ந்து வெற்றிகரமாக செயல்பட்டு வரும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது பவள விழாவை 2010 ஆம் ஆண்டில் கைத்தறித் தொழிலுக்கு அரும்பாடுபட்ட பெரியவர்களை கௌரவித்து, சிறப்பாகக் கொண்டாடப்படும்.

17. தேசிய ஆடை அலங்கார வடிவமைப்பு மையம் கோயம்புத்தூரில் அமைத்தல்

மைய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் தேசிய ஆடை அலங்கார வடிவமைப்பு மையம், தற்போது, தமிழ்நாட்டில் சென்னையில் மட்டும் இயங்கி வருகிறது. கைத்தறித் துணிகள், ஆயத்த ஆடைகள், பின்னலாடைகள் முதலியவற்றில் ஆடை அலங்கார வடிவமைப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தேசிய ஆடை அலங்கார வடிவமைப்பு மையமொன்று, மத்திய அரசுமூலம், மாநில அரசின் நிதிப் பங்கேற்பின் உதவியோடு கோயம்புத்தூரில் அமைக்கப்படும். இவ்விரு மையங்களைக் கொண்ட தமிழகம், நாட்டிலேயே ஆடை அலங்கார வடிவமைப்பில் முதன்மை மாநிலமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

18. கோயம்புத்தூரில் ஏற்றுமதிக்கான பன்னாட்டு தரம் வாய்ந்த வடிவமைப்பு மையம் ஏற்படுத்துதல்

ஜவுளித் தொழிலில், முக்கியமாக கைத்தறித்துணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு, புதிய வடிவமைப்புகள் உருவாக்கி வழங்க ரூ.50.00 இலட்சம் செலவில் பன்னாட்டு தரம் வாய்ந்த கணினி வடிவமைப்பு மையம், கோயம்புத்தூரில் நடப்பாண்டில் அமைக்கப்படும்.

19. கைத்தறிக் குழும வளர்ச்சித் திட்டத்தை விரிவுபடுத்துதல்

கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் சந்தை நிலவரத்திற்கேற்ப இரகங்களை உற்பத்தி செய்யும் திறனை வளர்க்கவும், தமிழ்நாட்டில் 40 கைத்தறிக் குழுமப் பகுதிகளில் மொத்தம் ரூ.27.66 கோடி திட்ட மதிப்பீட்டில், குழும வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2010-2011 ஆம் ஆண்டில்

2010 ஏப்ரல் 27]

இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, 15 புதிய கைத்தறி குழுமங்கள் ரூ.9.00 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

20. கைத்தறிக் குழு அணுகுமுறை திட்டத்தை விரிவுபடுத்துதல்

கைத்தறிக் குழும வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயன்பெறாத இதர கைத்தறி நெசவாளர்கள் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு, தமிழ்நாட்டில் இத்திட்டத்தின்கீழ், 119 குழுக்கள் ரூ.11.61 கோடி நிதியுதவி பெற்று வருகின்றன. குழு அணுகுமுறைத் திட்டத்தை, மேலும் பல்வேறு பகுதிகளுக்கு விரிவுபடுத்தி, 118 குழுக்கள் ரூ.6.00 கோடி திட்ட மதிப்பீட்டில் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும்.

21. கிராமப்புற இளைஞர்களுக்கு விசைத்தறித் தொழிலில் பயிற்சி அளித்தல்

கிராமப்புற இளைஞர்களுக்கு விசைத்தறித் தொழிலில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தவும், விசைத்தறி தொழிலினை மேம்படுத்தவும், நெசவு, புதிய வடிவமைப்பு, விசைத்தறிப் பராமரிப்பு போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். இதனால் நடப்பாண்டில் 4,000 கிராமப்புற இளைஞர்கள் பயனடைவர்.

22. தமிழ்நாட்டில் விசைத்தறிக் கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளுதல்

விசைத்தறித் தொழிலை மேம்படுத்தி விசைத்தறி நெசவாளர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தவும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் புதிய கொள்கைகளை வகுக்கவும், தற்போதுள்ள விசைத்தறிகள் மற்றும் தொழிலாளர்கள் குறித்த புள்ளிவிவரங்கள் சேகரிக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, விசைத்தறித் தொழில் தொடர்பான விவரங்களைச் சேகரித்து, விசைத்தறித் தொழிலை மேம்படுத்த, நடப்பாண்டில், விசைத்தறிக் கணக்கெடுப்புப் பணி (Powerloom Census) மேற்கொள்ளப்படும்.

23. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை நிலையங்களை நவீனமயமாக்குதல்

நுகர்வோரைக் கவர்ந்து, அதன்மூலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையினை அதிகரிக்க,

நடப்பாண்டில் 25 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை நிலையங்கள் ரூ.1.25 கோடி செலவில் குளிர்சாதன வசதியுடன் நவீனமயமாக்கப்படும்.

24. கைத்தறித் துணிகளின் விற்பனையினை அதிகரிக்க புதிய வடிவமைப்புகள் உருவாக்குதல்

மாறிவரும் வாடிக்கையாளர்களின் ரசனைக்கேற்ப கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு வரும் கைத்தறி இரகங்களின் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில், நடப்பாண்டில் ரூ.15.00 இலட்சம் செலவில் 500 புதிய வடிவமைப்புகள் அறிமுகப்படுத்தப்படும்.

25. கைத்தறித் துணிகளின் விற்பனையை மேம்படுத்த கண்காட்சிகள் நடத்துதல்

கைத்தறித் துணிகளின் விற்பனையினை அதிகரிக்கும் வகையில் மைய அரசின் நிதியுதவியுடன், 2010-2011 ஆம் ஆண்டில் 40 இடங்களில் மாவட்ட அளவிலான கைத்தறிக் கண்காட்சிகளும், 2 சிறப்பு கைத்தறிக் கண்காட்சிகளும், ஒரு தேசிய கைத்தறிக் கண்காட்சியும் நடப்பாண்டில் ரூ.132.50 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

26. கோ–ஆப்டெக்ஸின் 10 விற்பனை நிலையங்களை நவீனமயமாக்குதல் மற்றும் 20 விற்பனை நிலையங்களில் குளிர்சாதன வசதி செய்தல்

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான வசதி ஏற்படுத்தி, அதன்மூலம் விற்பனையை அதிகரிக்க ரூ.75.00 இலட்சம் செலவில், 10 விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்தப்படும். மேலும், 20 விற்பனை நிலையங்கள் ரூ.60.00 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதி செய்யப்படும்.